1978 மார்ச் 2]

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, வருவாய்த்துறை பற்றி புலனாய்வு செய்யும்போது, என்னென்ன கருத்துக்களை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று அரசு கருதுகிறது. குறிப்பாக, மாவட்ட ஆட்சித் தலைவர், கோட்டாட்சித் தலைவர், தாசில்தார் ஆகிய 3 அதிகார நிலைகள் வேண்டாம் என்று வற்புறுத்தப்பட்டு வருகிறதே, அதைப்பற்றியும் ஆராய்ச்சி செய்ய அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. கி. மனேகரன் : அதுபற்றியும் ஆலோசிக்கப்படும்.

Sales tax on prawns etc.

*342 Q—Thiru K. ABDUL LATHEEF, Thiru S. J. SADIQ PASHA Will the —Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether any representation has been received from the Sea Food Agents Association, Madras for exemption from the operation of the General Sales Tax Act for prawns, frogs etc, during August—September 1977 by the Government; and

(b) if so, the action taken thereon ?

மாண்புமிகு திரு. கி. மனேகரன் ; (அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசிலனையில் உள்ளது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, இறால் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, முதலில் அளித்த ‘ ஆம் ’ என்ற பதிலுக்கொப்ப, உடனடியாக அரசு பரிசீலித்து, அதற்கு விற்பனை வரியில் இருந்து ரத்து செய்து உடனடியாக ஆணையிட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கி. மனேகரன் : தலைவரவர்களே, நான் சாதிக் பாட்சா அவர்களின் சுவைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவருக்கு இருக்கும் இறால் பஞ்சம் எனக்குப் புரிகிறது. மீன் விற்பனைக்கு வரி விதிப்பில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் கடைசிக் கொள்முதல் முனையில், இறால் மீன்கள், கடல் நண்டுகள், நண்டுகள், தவளைகள், தவளைக்கால்கள் ஆகியவற்றிற்கு தமிழ்நாடு 1959-ம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதல் விவர அட்டவணையைச் சேர்ந்த 137-வது இனத்தின் கீழ் 3—3—1975-ஆம் நாளிலிருந்து 5 சதவீத வரி விதிக்கப்படுவதற்கு உட்பட்டதாகும். இவற்றிற்கு ஒருமுனை வரி

விதிக்கத் தக்கதாகையால் ரூபாய் 50,000 வரையிலுள்ள மொத்த விற்பனைக்கு வழங்கப்படும் பொது விலக்கு மேற்சொன்னவற்றின் விற்பனைக்குப் பொருந்தாது. எனினும், சிறு வணிகர்களுக்கு உதவி புரிவதற்காக, மேற்சொன்னவற்றை விற்பனை செய்யும் வணிகர்களின் ஆண்டு மொத்த விற்பனை 10,000 ரூபாய்க்கு அதிகப்படாமல் இருந்தால், அவர்களுக்கு விற்பனை வரி விதிப்பிலிருந்து அரசு விலக்களித்துள்ளது.

வணிக வரித்துறை அதிகாரிகளால், கடல் உணவு ஏஜெண்டுகள் மீனவர்கள் ஆகியோருக்குக் கொடுக்கப்படும் தொல்லைகள் குறித்து திருவாளர்கள் விஜயராகவன், எம். எல். ஏ., ஆர். இ. சந்திரன் ஜெயபால், எம். எல். ஏ., கே. பாலாஜி, எம். எல். ஏ., கணேசன், எம். எல். ஏ., ஆகியோரும் தமிழ்நாடு விசைப்படகு மீன்பிடிப்போர் சங்கமும், தமிழ்நாடு கடல் உணவு முகவர்கள் சங்கமும் (சென்னை) மீனவர்கள் பலரும் அரசுக்கு முறையிட்டுள்ள தோடு, இறால், மீன்கள், கடல் நண்டுகள், நண்டுகள், தவளைகள், தவளைக்கால்கள், ஆகியவற்றின் விற்பனைக்கு விலக்களிக்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளனர். இந்த முறையிட்டைக் குறித்து, கருத்து தெரிவிக்குமாறு வருவாய்த்துறை வாரியம் கேட்டுக்கொள்ளப் பட்டு உள்ளது. அதன் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

* 343 வினா—

வயதான அனாதைகளுக்கும் விதவைகளுக்கும் உதவி

* திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வயதான அனாதைகளுக்கும் விதவைகளுக்கும் உதவிப் பணம் கொடுக்கப்படுகிறதா ? எவ்வளவு ?

(ஆ) அதை அதிகப்படுத்தும் உத்தேசம் உண்டா ? எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : (அ) ஆம். மாதம் ரூ. 20.

(ஆ) இது பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : தலைவரவர்களே, 30 வயதிற்கும் கீழே விதவைகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு உதவி செய்ய இந்த அரசு என்ன ஏற்பாடு செய்து இருக்கிறது?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, மூப்புக் கால உதவித் தொகைத் திட்டத்தை 45 வயதுக்குக் குறையாத புகலற்ற விதவைகளுக்கு நீட்டிக்கும் ஆணைகள் நிதித்துறையின்